**இணை ஆணையர் (மா.வ),**
**செயலாக்கம்/இடைமாநில புலனாய்வுக்குழு**
**அவர்களின் செயல்முறை ஆணைகள்**

***பிறப்பிப்பவர் திரு.எஸ்.விஜயகுமார், எம்.எஸ்.சி.,***

**இடம் பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடம்,**
**எண். 1, இரண்டாம் தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006.**
**************************************************************************

**ந.க. 1629/2018/அ1** **நாள்: 17.07.2018**

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - இணை ஆணையர் (வவ), செயலாக்கம்/இடை மாநில புலனாய்வுக்குழு, சென்னை-6 - திரு.செ.செந்தில் முருகன், தட்டச்சர் - தகுதிகாண் பருவம் நிறைவு செய்தல் - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003 அவர்களின் கடித எண். 967/PSD-A/2016, நாள். 03.02.2016.
2) இணை ஆணையர் (வவ), சென்னை (மையம்) கோட்டம், சென்னை - 600 006 அவர்களின் செமுநக. 1045/2016/அ2, நாள். 23.03.2016.
3) இணை ஆணையர் (வவ), செயலாக்கம்/இடை மாநில புலனாய்வுக்குழு,சென்னை-6அவர்களின் செமுநக.220/2016/அ1, நாள். 13.04.2016.
4) இணை ஆணையர் (வவ), செயலாக்கம்/இடை மாநில புலனாய்வுக்குழு,சென்னை-6அவர்களின் செமுநக.397/2017/அ1, நாள். 24.08.2017.

--------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013 - 2014 மற்றும் 2014 - 2015 வரையில் அடங்கியுள்ள தட்டச்சர் பணியிடங்களுக்கு நடத்திய போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று வணிகவரித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இணை ஆணையர் (வவ), செயலாக்கம்/இடை மாநில புலனாய்வுக்குழு, சென்னை-6 அவர்களின் அலுவலகத்தில் திரு.செ.செந்தில் முருகன் என்பவர் தட்டச்சராகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு, தனியாளர் 21.04.2016 அன்று முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4-ல் காணும் இணை ஆணையர் (வவ), செயலாக்கம்/இடை மாநில புலனாய்வுக்குழு, சென்னை-6 அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் தனியாளரின் பணியானது 21.04.2016 முற்பகல் முதல் தட்டச்சர் பணி நிலையில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகள் விதி 32(அ)(i)-ன்படி, திரு.செ.செந்தில் முருகன் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 21.04.2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை தகுதிகாண்

பருவ காலமாக நிறைவு செய்தல் வேண்டும் எனவும், அத்தகைய தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைத் தேர்விலும், விதி 34(அ) பிற்சேர்க்கை V வகை எண்.5A-ன்படி "Certificate Course in Computer on Office Automation" தேர்விலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.செ.செந்தில் முருகன் |
| தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாள் | : | 21.04.2016 முற்பகல் |
| தகுதிகாண் பருவகாலத்தில் துய்த்த பணியில் சேராவிடுப்பு / ஊதியமில்லா விடுப்பு | : | இல்லை |

| தகுதிகாண் பருவ கால கணக்கீடு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பணிபுரிந்த காலம் | | | பணிக்காலம் | | | பணிக்கால வளர் கூடுதல் | | |
| முதல் | வரை | பணி / விடுப்பு | வருடம் | மாதம் | நாள் | வருடம் | மாதம் | நாள் |
| 21.04.2016 முற்பகல் | 30.04.2016 பிற்பகல் | பணி | 00 | 00 | 10 | 00 | 00 | 10 |
| 01.05.2016 முற்பகல் | 31.12.2016 பிற்பகல் | பணி | 00 | 08 | 00 | 00 | 08 | 10 |
| 01.01.2017 முற்பகல் | 31.12.2017 பிற்பகல் | பணி | 01 | 00 | 00 | 01 | 08 | 10 |
| 01.01.2018 முற்பகல் | 20.04.2018 பிற்பகல் | பணி | 00 | 03 | 20 | **02** | **00** | **00** |
| | | | | | | **இரண்டு ஆண்டுகள்** | | |

தனியாளர் 20.04.2018 பிற்பகல் அன்று இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை நிறைவு செய்துள்ளார்.

| வ. எண். | தகுதிகாண் பருவ காலத்திற்குள் முடிக்கப்படவேண்டிய / தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் | பதிவு எண் மற்றும் தேர்ச்சி பெற்ற நாள் | தேர்ச்சிக்கான ஆதாரம் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் | 002978 டிசம்பர் 2016 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிக்கைத் தாள் வெளியீட்டு எண். 6, நாள் 07.03.2017 பக்கம் எண். 567. |
| 2 | Certificate Course in Computer on Office Automation | 52627 டிசம்பர் 2016 | Department of Technical Education, Chennai. Certificate Number: COA 010370, dated: 01.03.2017. |

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 21.04.2016 முற்பகல் முதல் 20.04.2018 பிற்பகல் வரை முடிவடைந்த இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய இரு தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளமையால், தனியாளர் 20.04.2018 பிற்பகல் தட்டச்சர் பணி நிலையில் தனது தகுதிகாண் பருவ காலத்தை பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு நிறைவு செய்துள்ளார் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

*"The Probation is subject to the outcome of the WPs pending on the files of Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group-IV Services 2013-14 and 2014-15 recruitment."*

தனியாளர் இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார்.

ஒம்/- ச.விஜயகுமார்,
இணை ஆணையர் (வவ)
செயலாக்கம்/இடைமாநில புலனாய்வுக்குழு

**பெறுநர்**
திரு.செ.செந்தில் முருகன், தட்டச்சர்,
இணை ஆணையர் (வவ) அலுவலகம்,
செயலாக்கம்/இடைமாநில புலனாய்வுக்குழு,
சென்னை - 600 006.

**நகல்:**
இவ்வலுவலக 'அ1' உதவியாளர்
இ. கோப்பு / உதிரி - 1

//உண்மை நகல்//

இணை ஆணையரின் நேர்முக உதவியாளர்(வவ)(மு.கூ.பொ)